## தூய சக்தி மற்றும் வலைப்பின்னல் வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டம் (பகுதி – 7) 2017

தூய சக்தி மற்றும் வலைப்பின்னல் வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டத்தின் (பகுதி – 7) 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இலங்கை மின்சார சபை மற்றும் நிலைபெறுதகு சக்தி அதிகாரசபைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 மே 08 ஆம் திகதிய எஸ்ஆர்ஜ 43576 ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் 2.09(அ)ii ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் முன்னாள் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சாகவிருந்த தற்போதைய மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளது. இலங்கை மின்சார சபை மற்றும் நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை என்பன செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் பகுதி – 01 முதல் பகுதி – 06 வரை அமுல்ப்படுத்துவதற்குப் பொறுப்பாக உள்ள அதே நேரம் நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் பகுதி – 07 இன் கீழான நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்குப் பொறுப்பாக உள்ளது. செயற்திட்டத்தின் பகுதி 07 இன் கீழ் நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. தூய மின்வலு வழங்கலை அதிகரித்தல் மற்றும் இலங்கையில் மின்சாரத்தை விநியோகிப்பதில் வினைத்திறனையும் நம்பகத்தன்மையையும் முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் பிரகாரம் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 25,240 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 3,786 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 3.00 மில்லியன் செயற்திட்டத்தின் பகுதி – 07 இற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் அனைத்து பகுதிகளிற்கும் மேற்கொள்ளப்பட்ட நிதி ஒழுங்குகள் கீழே பொழிப்பாக்கப்பட்டுக் காண்பிக்கப்பட்டுள்ளன.

| **மூலம்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **இலங்கை ரூபா மில்லியன்** |
|---|---|---|
| ஆசிய அபிவிருத்தி வங்கி (2013 மே 08 இன் 2892 எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) 08 ஆம் இலக்கக் கடன்) | 30.0 | 3,786.00 |
| சாதாரண மூலதன வளம் (2013 மே 08 இன் 2893 எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன்) | 100.00 | 12,620.00 |
| தூய சக்தி நிதியம் (2013 ஆகஸ்ட் 08 இன் 0303 எஸ்ஆர்ஜ(ஈஎவ்) ஆம் இலக்க மானியம்) | 1.50 | 189.30 |
| இலங்கை அரசாங்கம் | 68.50 | 8,644.70 |
| **மொத்தம்** | **200.00** | **25,240.00** |

செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2013 செப்தெம்பர் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 யூன் 30 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், பின்னர் செயற்திட்டத்தின் பூர்த்தி செய்தல் திகதி 2019 யூன் 30 வரை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன்கள் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கட்டு நிதிக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்ததா என்பதும்,

(ஊ) கடன்கள் மற்றும் மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(எ) கடன்கள் மற்றும் மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன்கள் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 கணக்காய்வு அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 இன் எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/2 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 31 இற்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 27 இலேயே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது நிதிகளின் பயன்பாடு மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினங்கள் தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் நிதியளிக்கப்படுவதற்கு இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| **ஏடிபீ** | | | | | | | |
| எல்2892/2893 | 1.50 | 189.30 | 160.00 | 0.56 | 84.49 | 0.86 | 130.09 |
| **மானியம் 303** | 1.50 | 189.30 | 116.00 | 0.33 | 49.75 | 0.732 | 111.75 |
| **ஜிஓஎஸ்எல்** | 0.08 | 1.00 | 1.00 | 0.00 | 0.474 | 0.023 | 2.923 |
| **மொத்தம்** | **3.08** | **388.60** | **277.00** | **0.89** | **134.71** | **1.61** | **244.76** |

**3.2 பௌதீக செயன்முன்னேற்றம்**

செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் பிரகாரம் 04 தெரிவு செய்யப்பட்ட தேசிய பல்கலைக்கழகங்களில் கூரையின் மேலே மின்வலு உற்பத்தி செய்தல் முறைமைகளை நிறுவுதல் மற்றும் ஹோட்டல்கள் மற்றும் வணிக ரீதியான நிறுவனங்கள் போன்றவற்றின் நிலைபேறான தனியார் துறை பங்குபற்றுநர்களிற்கு வசதியளித்தல் போன்ற நோக்கங்களை கூரையின் மேலே சூரிய மின்வலு உற்பத்தி செய்தல் ஆரம்பச் செயற்திட்டம் உள்ளடக்குகின்றது. சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்த வேலைகள் 2018 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. எனினும் மின்வலு உற்பத்தி செய்தல் முறைமைகளை நிறுவுவதில் ஈடுபட்டிருந்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தக் காலப்பகுதியை நீடிப்பது தொடர்பான எந்தவொரு சான்றும் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

**4. நிதிக் கட்டுப்பாடுகள் தொடர்பான விடயங்கள்**

நிதிப்பிரமாணம் 134(3) இன் மூலம் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.